# என் சரித்திரம் – பதிப்புரையில் அறவுரைகள்

# Enn Sarithiram – Pathipuraiyil Aravuraigal

***முனைவர் ம.ஏ. கிருட்டினகுமார்***
இணைப் பேராசிரியர்
காஞ்சி மாமுனிவர் அரசு பட்ட மேற்படிப்பு மையம், புதுச்சேரி

**Dr. M.E. Krishnakumar**
*Associate Professor*
*Kanchi Mamunivar Government Post Graduate Center, Pondicherry*

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ்த்தாத்தாவின் "என் சரித்திரம்" என்னும் நூல் தன் வரலாற்றினை எடுத்தியம்பும் நூல் என்பது வெள்ளிடைமலை. அதனுள் பொதிந்துள்ள தமிழர் வாழ்க்கைமுறை, வாழ்நிலை, தமிழ்த்தொண்டு என்பன இக்காலத் தினருக்கும் வழிகாட்டும் பேறுடையதாகிறது. இதனை "என் சரித்திரம்" என்னும் நூற்கடலைக் கொண்டு அறிதல் இயலும். எனினும், தூய்மையான பனித்துளியின்வழிப் பாரினைக் காண்பது போல் ஆறாம் பதிப்பின் பதிப்புரை ஒன்றை மட்டுமே கொண்டு "தமிழ்த்தாத்தா" உ.வே. சாமிநாதையருடைய உயரெண்ணங்களை அறியவிழைந்ததன் விளைவே இக்கட்டுரை. டாக்டர் உ.வே.சா. நூல்நிலையக் காப்பாட்சியர் ம.வே.பசுபதி அவர்களின் எளிய பதிப்புரையில் பொதிந்துள்ள அறவுரைகளைக் காண்பதாகவே இக்கட்டுரை அமைகிறது.*

***முக்கியச் சொற்கள்:***
*வெள்ளிடைமலை, தமிழ் தாத்தா, தமிழ் வாழ்க்கை முறை, எம்.வி.பசுபதி*

**Abstract**

*Vellidaimalai is the book where Tamil Datta's 'En Sarithiram' takes its history. The Tamil way of life and lifestyle embedded in it and the Tamil charity are the guiding principles of this age as well. It is possible to know this with the centenary of 'En Sarithiram'. However, this article is the result of a study of the sixth edition of the 'Tamil Datta' Dr.Vu.Ve.Sa. This article is set up to look at the instructions embodied in the simple review of the library curator M.V. Pasupathi.*

***Keywords:***
*Tamil Datta, En Sarithiram, Vu.Ve. Sa., Pathuppattu, Ettuthogai*

**Citation**

Krishnakumar, M.E. "Enn Sarithiram – Pathipuraiyil Aravuraigal." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 3, 2022, pp. 41–45.

**தமிழர் கடமை**

*உரிமையைக் கொண்டாடுவோர்க்கு, கடமையாற்றுவதிலும் பெரும்பங்குண்டு. இதனை, உணர்ந்தோராலேயே முன்னோரின் புகழைக் காக்கமுடியும். அத்தகையோரே தவமிருந்து பெற்றபிள்ளைகள் எனப் பாராட்டவும்படுவர். அவ்வாறு தமிழ் இலக்கிய உலகிற்கு பெருங்கொடையளித்த "தமிழ்த்தாத்தா" எனப் போற்றப்பட்ட உத்தமதானபுரம் வேங்கடப்பர் மகனாகிய சாமிநாதையரின் அரும்பணியினை. பதிப்புரையிலேயே படம்பிடித்துக் காட்டிவிடுகிறார் பசுபதி. ஏனெனில், தன் உயிரைப் பெரிதென எண்ணாது ஊர்தோறும்சென்று தமிழேடுகளைத்திரட்டி நூலாக்கிய பெருமை தமிழுள்ளவரை (உலகுள்ளவரை) வாழுமென்பது தெளிவு. என் சரித்திரத்தின் பெருமையினை, இவற்றின் ஒவ்வோர் எழுத்தும் வாய்மை நிரம்பிய வைர எழுத்துக்கள். "என் சரித்திரம்" கற்றால் தமிழார்வம் வரும். வந்த தமிழார்வம் வளரும் (என் சரித்திரம், ஆறாம் பதிப்பு, பதிப்புரை), எனப் பசுபதி அவர்கள் குறிப்பிடுவது இங்கு எண்ணத்தக்கது.*

*இவ்வாறு தமிழறிஞர்களின் அவ்வருஞ் செயலை காலந்தோறும் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டிய கடப்பாடு தமிழர் ஒவ்வொருவருக்கும் உரியது. அதன் விளைவாகவே தமிழ்த்தாத்தாவின் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளதோடு தம் உள்ளக்கிடக்கையை நில்லாது, பதிப்புரையாக்கியுள்ளார் பசுபதி. இதன்வழி பதிப்பாசிரியரின் கடமையுணர்வும் புலப்படுகிறது.*

**தமிழ்த்தாத்தாவின் உழைப்பு**

*தமிழைத்தேடி அலைந்த உடலுழைப்பு; எழுதி ஆய்ந்த ஆய்வுழைப்பு; குறிப்புரை, பதவுரை, பொருட் துணிவு என்னும் அறிவுழைப்பு; நாளைய தலைமுறைக்குரிய செல்வம் என அச்சேற்றிய திறனுழைப்பு; அதற்கான இன்னல்களை எண்ணாது தம் பொருள்களை இழந்து தமிழேடுகளைப் பெற்று மகிழ்ந்த நல்லுழைப்பு எனத் தமிழ்த்தாத்தாவின் உழைப்பு அளவிடற்கரிது. இதனையே மகாகவி பாரதியார்*

***ஏடு தேடி அலைந்த ஊர் எத்தனை***
***எழுதி ஆய்ந்த குறிப்புரை எத்தனை***
***பாடுபட்ட பதத்தெளிவு எத்தனை***
***பன்னெறிக்கட் பொருள் துணிவு எத்தனை***
***நாடும் அச்சிற் பதிப்பிக்கும் கூலிக்கு***
***நாளும் விற்ற பண்டங்கள் எத்தனை***
***கூட நோக்கினர்க்கு ஆற்றின எத்தனை***
***கோதிலாச் சாமிநாதன் தமிழுக்கு என்றே!***

***(என் சரித்திரம், ஆறாம் பதிப்பு, பதிப்புரை)***

*எனத் தமிழுக்காகத் தன் சொத்தை இழந்து தமிழ்ச்சொத்தைக்காத்த தமிழ்த்தாத்தாவின் பெருமையினைச் சுட்டிக்காட்டுகிறார். தமிழுக்காகத் தன்னை இழந்து; தன் பொருளை இழந்த பெருமகனாரின் உழைப்பினை மகாகவியின் இப்பாடலின் வழியே பதிப்புரையில் புலப்படுத்து விடுகிறார் பசுபதி. இப்பதிப்பின்வழி உழைத்து வாழ வேண்டியதன் முக்கியத்துவத்தினையும் உணர்த்திவிடுகிறார்*

**பொன்மொழிகளின் உரு**

*தமிழுக்காக வாழ்வோர் தரணி உள்ளவரை வாழ்வார். வலியோரிடமும், வறியோரிடமும், எளியோரிடமும் பணிந்து வேண்டி தமிழேடுகளைத் திரட்டிய பண்பு எண்ணற்கரிது. இதனை இந்நூலைக் கற்றால் ''பெருக்கத்து வேண்டும் பணிதல்'' என்னும் இலக்கணத்துக்கு இதுதான் சரியான இலக்கியம் என்ற உண்மை தெளிவாகும். பேதங்களுக்கு அப்பாற்பட்டபோதம் தான் தமிழ்ஞானம் என்பது இந்நூலின் தொகு மொத்தப்பொருள் என்றால் அது மிகையாகாது. ''நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்; என்ற தொடரை விளக்குவதற்காக இவர் மண்ணுலகில் பிறந்தார் என்று கொள்ள வேண்டியிருக்கிறது (என் சரித்திரம், ஆறாம் பதிப்பு, பதிப்புரை) என்னும் கூற்று பொன்மொழிகளுக்கு உருவாகநின்ற தமிழ்த்தாத்தாவின் பெருமைகளை பதிப்புரை உணர்த்திவிடுகிறது.*

**தமிழ்க்கொடை**

*வரலாறின்றி புகழில்லை. எனவே வரலாற்றினைக் களைவதே எதிரிகளின் முதல் செயலாக அமைகிறது. அதில் முக்கிய இடம்பெறுவன ஏடுகள். ஏடுகள் எளிதில் அழிந்துவிடும் என்பதாலேயே அவ்வப்போது படிஎடுத்து காலந்தோறும் அடுத்த தலைமுறைக்கு சென்றுசேர படியெடுத்தோர் பலர். அவர்கள் தங்கள் புகழை நிலைநிறுத்த எண்ணவுமில்லை. தமிழ்ப்பணியொன்றே கடன் எனப் படிஎடுத்த அத்தகைய முன்னோர்களின் பணியினைப் போற்றும் வகையில் பல்லேடுகளைத் திரட்டி நூலாக்கியவர் தமிழ்த்தாத்தா. அவருடைய அரும்பணியால் சங்க இலக்கியங்கள் தங்க இலக்கியங்கள் எனப்போற்றமுடிகிறது. பத்துப்பாட்டும், எட்டுத்தொகையுள் ஐந்தும், மூன்று பெருங்காப்பியங்களும், ஐம்பதிற்கும் மேற்பட்ட பிற இலக்கியங்களும், இலக்கண நூல்களும் நின்று நிலவுவதற்குக் காரணம், டாக்டர் உ.வே.சா. அவர்களின் அயரா உழைப்பே என்பதை இந்த மன்பதை அறியும். அந்நூல்களைக் கற்கும் முன்; ''என் சரித்திரம்'' என்னும் இந்த நூலைக் கற்க வேண்டும். இதனைக் கற்றால் தமிழ் நூல்களை அச்சுக்குக் கொண்டுவர அவர்பட்ட இன்னல்கள் புரியும் (என் சரித்திரம், ஆறாம் பதிப்பு, பதிப்புரை) என்னும் கூற்றின்வழித் தமிழ்த்தாத்தாவின் தமிழ்க் கொடையினைப் புலப்படுத்தியுள்ளார் பதிப்புரை எழுதியுள்ள பசுபதி.*

**இலக்கியப் புதையலைக் காத்தல் வேண்டும்**

*இலக்கியங்கள் வாழ்வை விளக்கும் விளக்கு. அதன் ஒளியினை உலகெங்கும் பரவச்செய்யும் பொறுப்பு அவ்வவ் மொழி பேசும் மக்கள் கடன். உலகெங்கும் பரவி நின்ற தமிழரின் எழுத்துக்கள் ஓலைச்சுவடிகளால் இன்றும் பல நாடுகளில் அப்படியே பாதுகாக்கப்படுகின்றன. அழிந்துபோனவை எண்ணிலடங்கா. எனினும் இருக்கும் ஏடுகளிலுள்ள இலக்கியச் செல்வங்களைத் தொகுத்து பதிப்பித்தால் இன்னும் பல அரிய இலக்கியங்களைப் பெற இயலும். இதனை அச்சில் வெளிவராத தமிழ் நூல்கள் இன்னமும் இருக்கின்றன. ஓலையில் இருக்கும் அவற்றை அச்சுத் தமிழ்ச் சோலையில் உலாவரச் செய்ய முயலும் தமிழ்த்தொண்டர்களை மேலும் உருவாக்க இந்நூல் உதவ வேண்டும் என எல்லாம் வல்ல திருவருட்சக்தியை இறைஞ்சுகிறேன் (என் சரித்திரம், ஆறாம் பதிப்பு, பதிப்புரை) எனப் பசுபதி குறிப்பிட்டுள்ளதனைக் காணமுடிகிறது.*

**தமிழர்கள் வாழ்வை நூலாக்குக**

*தமிழர்களின் வாழ்வைப் படம் பிடித்துக்காட்டும் இலக்கியங்கள் எனில் சங்க*

*இலக்கியங்களே நினைவில் வரும். தமிழுக்காகத் தொண்டு செய்த தமிழன்னையின் பெருமையினைப் பறைசாற்ற தம் வாழ்நாளெல்லாம் உழைத்த சான்றோர்களை உலகம் எண்ணிப்போற்ற மறந்துவிட்டது. அதற்கு அந்நியப் படையெடுப்புகளே காரணமாயிற்று. தமிழரைப் போற்றினால் ஆங்கிலேயர் வதைப்பர் என எண்ணி தமிழ் இலக்கிய ஏடுகளை ஆற்றில்மிதக்கவிட்டும்தீயில்எரித்தும்தம்மினத்தின்புகழைத்தாமேஅழித்துக்கொண்டிருந்தனர். அத்தகையோரில்சிலர்எரிக்கமனமின்றி வீட்டின்ஏதோஓர்மூளையில்குவித்துவைத்திருந்தனர். அவற்றையெல்லாம் வீடு வீடாகச் சென்று தொகுத்த பெருமை தமிழ்த்தாத்தாவிற்கே உரியது எனில்மிகையன்று. தமிழின்வளர்ச்சிதடைபட ஆங்கிலேயரின்அடக்குமுறையோடுதமிழர்களின் அச்ச உணர்வும் காரணமாயிற்று. முப்பது கோடி மக்களை ஒன்றிணையவிடாமல் ஆங்கிலேயர்கள் ஆட்சிசெய்த கொடுமையினை எண்ணிப் பார்த்தால் தமிழர்தலை மண்ணை நோக்கும். தமிழர்களுடைய வீரத்தையும் பெருமையினையும் மக்களுக்கு உணர்த்தும் வகையிலும் இப்பணியினை மேற்கொண்டிருந்ததாகவும் கொள்ளமுடிகிறது.*

*காலந்தோறும் இளைய தலைமுறைக்கு தமிழுணர்வை ஊட்டவேண்டும். அதற்குரிய வகையில் தமிழ்ப்பணி இடையறாது நடைபெற வேண்டும். இதுவே பெரியோர் கடன். இதனை, தமிழ்த்தாத்தா டாக்டர் உ.வே.சா அவர்களின் பதிப்புப்பணி அதே பாணியில் இந்நூல்நிலையம் வாயிலாக, உ.வே.சா. அவர்களின் திருமகனார் திரு.சா.கல்யாண சுந்தரம் ஐயர் அவர்களாலும், டாக்டர் உ.வே.சா. அவர்களின் பெயரனார் திரு.சு.வேங்கடகிருஷ்ணன் அவர்களாலும் தொடர்வது மிக்க மகிழ்ச்சிக்குரியததாகும் (என் சரித்திரம், ஆறாம் பதிப்பு, பதிப்புரை) எனக் குறிப்பிட்டுள்ளதன் வழி முன்னோர் பொருளை பொன்னே போல் போற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தினையும் எடுத்துக்காட்டியுள்ளார் பசுபதி.*

**வாய்மையன்றி வேறில்லை**

*பின்னப்படும் நூல் தரமானதாக இருந்தால் ஆடை தரமாகி விடுவதைப்போல எண்ணப்படும் கருத்து தரமானதாக அமையின் கற்கும் நூலும் தரமாகிவிடுகிறது. அவ்வாறு உண்மையை மட்டுமே கொண்டு எழுதப்பட்ட நூலாக "என் சரித்திரம்" அமைகிறது. டாக்டர் உ.வே.சா. அவர்களின் என் சரித்திரமும் மகாத்மா காந்திஜி அவர்களின் சத்திய சோதனையும் ஒரேதரம் உடையவை (என் சரித்திரம், ஆறாம் பதிப்பு, பதிப்புரை) என்னும் பசுபதியின் கூற்று தமிழ்த்தாத்தாவின் அருமையினை தமிழுலகிற்கு எடுத்துரைப்பதாக அமைகிறது.*

**எண்ணமே வழக்காயிற்று**

*எண்ணம் சொல்லாகவும்; சொல் செயலாகவும்; செயல் பழக்கமாகவும்; பழக்கம் வழக்காகவும் மாறுவதே மானுட இயல்பு. அவ்வாறு தமிழ் இலக்கியத்திடம் கொண்டகாதல் படிப்படியாக வளர்ந்து தமிழ்ப்பணியன்றி வேறு பணியில்லை என்னும் அளவிற்கு தமிழ்த்தாத்தா தம் வாழ்வையே கொடையளித்தார். தமிழ்த்தாத்தாவின் எண்ணம் எழுத்தானது; நூலானது; தமிழர் இலக்கிய வாழ்வானது; புகழுக்கு உரம்சேர்க்கும் ஆவணமானது. பெரும்புலவர்களின் அரிய தமிழ் அழிந்துவிடலாகாது அவருடைய எண்ணம், நூலாகி மானத்தைக் காத்தது. இதனை மகாகவியின் அடிகளைக் கொண்டே உணர்த்திவிடுகிறார் பசுபதி.*

***நிதி அறியோம் இவ்வுலகத்து ஒரு கோடி***
***இன்பவகை நிமித்தம் துய்க்கும்***
***கதி அறியோம் என்று மனம் வருந்தற்க***

***குடந்தைநகர்க் கலைஞர் கோவே***
***பொதியமலைப் பிறந்த மொழி வாழ்வறியும்***
***காலமெலாம் புலவோர் வாயில்***
***துதி அறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய்***
***இறப்பின்றித் துலங்குவாயே (என் சரித்திரம், ஆறாம் பதிப்பு, பதிப்புரை)***

*என்னும் அடிகள் தமிழ்த்தாத்தாவின் காலம் காணா உழைப்பினை எடுத்துக்காட்டியுள்ளதை உணர்த்திவிடுகிறது. இதன்வழி தமிழுக்காகத் தம் வாழ்நாளையே கொடையளித்த உ.வே.சா. வாழ்க்கையினை அறிந்து; அறவுணர்வுகளைத் தெளிந்து; தமிழ்க்காக்கும் செயலில் தோய்ந்து வாழவேண்டுமெனத் தெளிவாகிறது.*

**நிறைவாக**

*“பதிப்பாசிரியரின் அருமையினைப் பதிப்பாசிரியரே அறிவார்” என எண்ணுதற்கேற்ப பதிப்பாசிரியர்களின் முன்னோடியாகச் சிறப்புற்று விளங்கிய தமிழ்த்தாத்தாவின் “என் சரித்திரம்” அமைகிறது. எனவே, இவ்வரிய முயற்சியினைப் பசுபதியின் பதிப்புரை படம்பிடிக்காட்டிவிடுவதனை உணரமுடிகிறது.*

*பதிப்புரையின் தொடக்கத்திலும் நிறைவிலும் மகாகவி பாரதியாரின் கவிதையோடு தமிழ்த்தாத்தாவின் பெருமைகளை எடுத்துக் கூறியுள்ளது சிறப்புடையதாகிறது. மகாகவியின் துணையோடு பதிப்புரை வழங்கியதிறம் பதிப்புரையின் அழகினை மேம்படுத்தி விடுவதனைக் காணமுடிகிறது.*

*பதிப்பாசிரியர்களின் முன்னோடியான தமிழ்த்தாத்தாவைப் போல் தமிழறிவு வாய்க்கப் பெற்றோர் எவரும் இல்லை என்பதனை இலக்கிய வரலாறு எடுத்துக்காட்டுகிறது. எனினும், அவ்வாறு எழுதத்துணிவது பதிப்பாசிரியர்களின் தமிழ்ப்பற்றின் காரணமாகவே அமைகிறது. பதிப்பாசிரியரின் தமிழ்ப் புலமையினை அறியவிழையாது அவர்களுடைய ஈடுபாட்டைக் காண்பதே அறிவுடைமையாவதனை உணர்ந்துகொள்ளமுடிகிறது.*

*தமிழ் எழுத்தாளர்களாக எண்ணுவோர் பலர். எழுதிச் சிறப்போர் சிலர். அவ்வெழுத்தில் அரிதான செய்திகளைக் கூறுவோர் மிகச்சிலர். வரலாற்று ஆவணங்களாக்குவோர் மிகமிகச்சிலர். அத்தகைய பெரும்பணியினைச் செய்த “தமிழ்த்தாத்தாவின் சரித்திரத்தைப் பதிப்பித்து வெளியிடுகிறோம்” என்னும் பெருமித உணர்வொன்றே பதிப்பாசிரியரான பசுபதியினை, பதிப்புரை வழங்கச் செய்திருக்கிறது எனத் தெளியமுடிகிறது.*

*இப்பதிப்புரையின் வழி தமிழினை; தமிழறிஞரைப் போற்றுதற்குத் தமிழ்ப்புலமையைக் காட்டிலும் தமிழ்ப்பற்றே முக்கியத்துவம் வாய்ந்ததெனப் புலனாகிறது.*

## References

1. *Saminathayavargal Vu.Ve., “En Sarithiram”., Vu.Ve.Saminathaiyar Library, Chennai, First Edition, 1950.*
2. *http://www.projectmadurai.org/*